# முரசொலி

பக்கங்கள் ஆறு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 121 பிரசோற்பத்தி பங்குனி 14 ( 27.03 1992 ) வெள்ளி


★ கொக்கட்டிச்சோலை

## கொலையிலீடுபட்ட படையினரை அடையாளம் தெரியவில்லையாம்!

கொக்கட்டிச்சோலை படுகொலையில் ஈடுபட்ட சிப்பாய்களை அடையாளம் காணமுடியவில்லை என இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்குழு தெரிவித்துள்ளது, எனவே கொலையிலீடுபட்ட இராணுவத்தினரை நீதிமன்று கொண்டுவரமுடியாதுள்ளது எனவும் விசாரணைக்குழுவின் இறுதியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இராணுவம் தனது சொந்த விசாரணைகளை நடத்தி குற்றம் புரிந்த சிப்பாய்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் இப்படியான நிகழ்ச்சிகள் தொடராமல் இருக்க படையினருக்கு பயிற்சி வழங்குமாறும் விசாரணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டது,

★ கேணல் முனசிங்க கூறுகிறார்

# இவ்வருடம் ராணுவரீதியில் புலிகள் பலமிழக்க செய்வதே எமது நோக்கம்

### அண்மைக் காலமாக இராணுவ இழப்பும் அதிகரித்துள்ளதாம்

**இந்த ஆண்டு இறுதிக்குள் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலமிழக்கச் செய்வதே இராணுவத்தின் நோக்கம் என இராணுவப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க நேற்று தெரிவித்தார்.**

செய்தியாளர் மாநாட்டில் பேசிய கேணல் முனசிங்க, ''புலிகளை இராணுவ ரீதியில் செயலிழக்கச் செய்யும் தமது இலக்கை அடைய பாதுகாப்புப் படையினர் தம்மால் இயன்றளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

அண்மைக்காலமாக இராணுவத்துக்கு ஆளணி, பொருள் சேதம் ஆகியன அதிகரித்து வருவது குறித்து செய்தியாளர் ஒருவர் கேட்ட போது, அதை கேணல் முனசிங்க ஏற்றுக்கொண்டார்.

படை இழப்பு இப்போது அதிகரித்துள்ளதாகவும், இராணுவ வாகனங்கள் பல சேதமாக்கப்பட்டுவிட்டன எனவும் அவர் அப்போது சுட்டிக்காட்டினார்.

● ஸ்ரீலங்கா கடற்படை தளபதி சொல்கிறார்

## கடற்படை சீருடையில் புலிகளே தமிழக மீனவரை தாக்குகின்றனர்

இந்தியக் கடற்படைக்கும் ஸ்ரீலங்கா கடற்படைக்கும் இடையில் இருந்த சில தப்பபிப்பிராயங்கள் இப்போது நீக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களிடையே பேசிய அவர், தாம் அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தினால் இருதரப்பினரிடையே இருந்த தப்பபிப்பிராயங்கள் நீங்கியதாக குறிப்பிட்டார்.

இந்தியக் கடற்படை இப்போது பாக்கு நீரிணையில் தனது ரோந்தை அதிகரித்துள்ளதாகவும் கிளான்ஸி பெர்னாண்டோ கூறினார்.

ஸ்ரீலங்கா கடற்படை தமிழக மீனவர்களை தாக்குவதாக செய்திகள் வருகின்றனவே எனக்கேட்டபோது, ''இது தவறான செய்தி இலங்கை கடற்பகுதியில் இறால் பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவரை ஸ்ரீலங்கா கடற்படை கண்டுகொள்வதில்லை'' என கடற்படைத் தளபதி பதிலளித்தார்.

இந்திய ஸ்ரீலங்கா உறவை கெடுக்க புலிகளே கடற்படை சீருடையில் வந்து தமிழக மீனவர் மீது சூடு நடத்தியிருப்பர் என அவர் அப்போது குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பு சுற்றிவளைப்பு ஒருவர் ஹெலியில் ஏற்றப்பட்டார்

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாம் படையினரால் கடந்த திங்களன்று பல கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டன.

சுற்றிவளைப்பின் போது ஒரு பாடசாலை அதிபர் உட்பட 13 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் இவர்களின் கைகளையும் கண்களையும் கட்டிபடையினர் சித்திரவதைகளை மேற்கொண்டனர்.

பின்னர் 12பேர் விடுவிக்கப்பட்டனர் பொதுமகன் ஒருவர் ஹெலிகப்டரில் படையினரால் ஏற்றிச்செல்லப்பட்டார்

இச் சுற்றிவளைப்பின்போது 15 சைக்கிள்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

★ செங்கலடிப்பகுதியில்

## பாடசாலையில் படை சூடு இரு மாணவர்கள் பலி

நேற்று முன்தினம் செங்கலடியில் இராணுவ அணிமீது புலிகள் அதிரடி நடத்திய போது அங்கிருந்து தப்பியோடிய சில சிப்பாய்கள் அருகிலுள்ள பாடசாலையினுள் நுழைந்து சரமாரியாக சுட்டனர்.

இதில் இரு மாணவர்கள் பலியாகினர் மேலும் 3மாணவர்களும் இரு ஆசிரியர்களும் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

● கொழும்பு துறைமுகத்தில் சம்பவம்

## தங்கம் வடக்கிற்கு கடத்தப்பட்டதாக ரயர்கள் படையினரால் சோதனை

குமண சப்பலில் ஏற்றுவதற்காக கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்ட 82 ஆயிரம் சைக்கிள் ரயர் ரியூப் என்பன கடற்படையினரால் ஒவ்வொன்றாக கடும் சோதனையிடப்பட்டன. சைக்கிள் ரயர் ரியூபுகளில் வைத்து வடக்கே தங்கம் கடத்தப்படுவதாக வந்த புகாரையடுத்தே இவை சோதனையிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது இதனால் துறைமுகத்துக்கு வந்த வடபகுதியைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் சிலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (45)

★ கொக்கட்டிச்சோலை படுகொலை

## ஆணைக்குழு இறுதியறிக்கை அமைச்சரவை ஏற்றது

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பாக ஜனாதிபதி விசாரணைக்குழுவின் இறுதியறிக்கையை அமைச்சரவை ஏற்றுள்ளதாக தகவல் துறை இராஜாங்க அமைச்சர் டபிள்யூ. ஜே. எம் லொக்குபண்டார நேற்றுத் தெரிவித்தார்.

இப்படுகொலைச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கென மொத்தம் 52 இலட்சத்து 40ஆயிரம் ரூபாவை வழங்கவும் அமைச்சரவை இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்,

● பாராளுமன்றத்தில் சவான்

## புலிகளை தடைசெய்ய இந்திய அரசு பரிசீலிக்கிறதாம்

இந்தியாவில் சீர்குலைவு நடவடிக்கையில் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளதால் அவ்வமைப்பை இந்தியாவில் தடைசெய்வது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது என இந்திய உள்துறையமைச்சர் சவான் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சவான், புலிகளின் தற்கொலைப்படை தமிழகத்தில் ஊடுருவியுள்ளதாக வெளிவந்த செய்திகளையடுத்து முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பு அரசினால் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

ஜெயலலிதா அண்மையில் புதுடில்லி வந்தபோது இது தொடர்பாகவே பேசப்பட்டதாகவும் சவான் மேலும் தெரிவித்தார்.

## கத்தோலிக்கக் குழுவினர் இன்று புலிகளுடன் பேசுவர்

யாழ் வந்துள்ள கத்தோலிக்க நல்லெண்ணக்குழு இன்று விடுதலைப் புலிகளை சந்தித்துப் பேசவுள்ளனர்

பேச்சுகளின் போது புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கமும் யோகியும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது

யாழ் வந்த கத்தோலிக்கக் குழுவில் சிலாபம் ஆயர் அதிவண. மார்கஸ் பெர்னாண்டோ, கண்டி ஆயர் அதிவண வியனி பெர்னாண்டோ உட்பட ஐவர் இடம் பெற்றுள்ளனர்.

## செயலக ஜெனரேட்டர் பழுது பிறப்புப் பத்திரம் வழங்கல் தாமதம்

யாழ் அரசாங்க அதிபர் கா மாணிக்கவாசகர் சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பு சென்றவேளை செயலகத்தில் இருந்த ஜெனரேட்டர் பழுதடைந்து விட்டது.

இதனால் செயலக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு பதிவேடுதேடும் அறை இருளில் மூழ்கியிருப்பதால் பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குவது தாமதம் ஏற்படுவதாகவும் இந்த ஜெனரேட்டரில் ஒயில் இல்லாததினால்தான் பழுதடைந்திருப்பதாகவும் யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (47)

## முக்கிய இடங்களுக்கே கிளிநொச்சியில் மின்சாரம்

கிளிநொச்சிக்கு விரைவில் மின்சாரம் கிடைத்துவிடும் எனவும் முக்கிய மின் இணைப்பு வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தியாவசிய சேவைகளான ஆஸ்பத்திரி மிருக வைத்தியப் பிரிவு நீர் வழங்கல் பிரிவு போன்ற முக்கிய இடங்களுக்கே முதலில் மின்சாரம் வழங்கப்படும் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 17

## செஞ்சிலுவைத் தேர்தல் களம்

★ அலுவலகம் இடம்மாறிய பின்பும்

## செயலாளரின் வீட்டிற்கு செஞ்சிலுவைக் கொடி

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இலங்கை செஞ்சிலுவை சங்கக்கிளை அதன் செயலாளர் வீட்டிலேயே ஜனவரி மாதம் வரை இயங்கி வந்தது.

ஆனால் கடந்த மாதம் 29 ஆம் திகதியில் இருந்து இக்கிளை 154 பழைய பூங்கா வீதியில் செயற்படுகிறது.

ஆனால் செயலாளரின் வீட்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கொடி இன்னமும் இறக்கப்படாமலேயே உள்ளது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் இக்கிளையில் நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (01)

## ஆண்டறிக்கை இல்லை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை தேர்தல் 29.03.92 இல் நடைபெறவுள்ளது. எனினும் இத்தேர்தலில் போட்டியிட உள்ளவர்கள் பற்றிய விவரங்களோ அல்லது ஆண்டறிக்கையோ இதுவரை இக்கிளையின் கீழ் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளைகளுக்கு தற்போதைய நிர்வாகத்தினால் அனுப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுறது.

தேர்தலில் போட்டியிடும் தற்போதைய நிர்வாகிகள் தமக்கு ஆதரவு கிடைக்க வேண்டும் என்பதற்காக புதியவர்களின் பெயர்களை ஏனையோர் அறியாதிருப்பதற்காகவே இவ்வாறு அனுப்பப்படவில்லை எனவும் தெரியவருகிறது. (01)

## செஞ்சிலுவைச்சங்க கூட்டத்தில் வேட்பாளர் கண்டனம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைக்கென அனுப்பப்படவிருந்த 46 லட்சம் ரூபாவை யாழ் கிளை கட்டாயப்படுத்தி எடுக்காமல் விட்டது யாழ் கிளையின் இயலாத்தனம் என யாழ் கிளை தேர்தலில் தலைவராக போட்டியிட உள்ள திரு. இராமநாதன் நேற்று முன்தினம் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் செஞ்சிலுவைச்சங்க கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இப்பணத்தை யாழ். கிளையின் வங்கிக்கணக்கில் இட்டு அமைதியான சூழ் நிலை திரும்பும் நேரத்தில் நெடுந்தீவு படகுச் சேவைக்குப் பயன்படுத்தி இருக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். 01

### கணக்காய்வாளரின் அங்கீகாரம்

## நிதியறிக்கை பெறவில்லை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை தேர்தலின் போது நடைபெற உள்ள பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதி அறிக்கை உரிய உள்ளகக் கணக்காளரின் பரிசீலனைக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படாமலேயே அறிக்கை தயார் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக காரசாரமான விவாதம் நடைபெற உள்ளதாக யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் திரு. தியாகராசா தெரிவித்துள்ளார். 001

## உலகக்கிண்ண கிரிக்கெட்

### முரசொலி' வினா விடைப் போட்டி

இப்போட்டியில் வினாவப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. ஐந்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதலாவது இடத்தைப் பெற்ற நாடு. பாகிஸ்தான்
2. இரண்டாவது இடத்தைப் பெற்ற நாடு. இங்கிலாந்து
3. இத்தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப்பெற்றவர். மாட்டின் குறோ (நியூசிலாந்து அணி)
4. இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெற்றவர். வசீம் அக்கிரம் (பாகிஸ்தான் அணி)
5. முதலாவது உலகக்கிண்ணப் போட்டி
   (அ) இங்கிலாந்தில் நடைபெற்றது
   (ஆ) 1975-ம் ஆண்டில் நடைபெற்றது

இப்போட்டிக்கு வந்து குவிந்த விடைகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. விரைவில் பரிசு பெற்றோர் விவரம் முரசொலியில் பிரசுரிக்கப்படும்.

நிர்வாகம்.

★ கேட்கப்பட்டது 137 மில்லியன் ரூபா

## யாழ். மாவட்ட வேலைத்திட்டம் 63 மில்லியன் ரூ. மட்டுமே ஒதுக்கீடு

யாழ். மாவட்ட வேலைத் திட்டங்களுக்கென 63 மில்லியன் ரூபாவை இவ்வருடத்திற்கென புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இவ் வேலைத்திட்டங்களுக்கென யாழ், செயலகம் 137 மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தரும்படி புனர்வாழ்வு அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் பயனளிக்கவில்லை.

இந்த 63 மில்லியன் ரூபாவில் கூட்டுறவுத்திணைக்களத்துக்கு 5மில்லியன் ரூபாவும் சமூகநலசேவைக்கு 01 மில்லியன் ரூபாவும், கல்வித்திணைக்களத்துக்கு 22 மில்லியன் ரூபாவும், வீடமைப்பு அதிகாரசபைக்கு 35மில்லியன் ரூபாவும் புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது 47

## பிட்டுடன் சங்கத்திற்கு வந்த பெண்மணி

கையில் சிலம்புடன் மன்னனிடம் நீதிகேட்டு வந்தாள் கண்ணகி. அதேபோன்று கையில் பிட்டுடன் கூட்டுறவுச் சங்கத்திடம் நீதிகேட்டு வந்தார் ஒரு பெண்மணி. சில தினங்களுக்கு முன்னர் பிரபல்யமான பெண்மணி தீவுப்பகுதியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் யாழ்ப்பாணக் கிளையொன்றில் மா வாங்கிச் சென்றாராம். வீட்டில் அந்த மாவைக் கொண்டு உணவாக பிட்டுத் தயாரித்த பின்னர் தான் மா தரமற்றது எனக் கண்டுபிடித்தார் அவித்த பிட்டையும் மிகுதி மாவையும் எடுத்துக்கொண்டு மேற்படி கூட்டுறவுச் சங்க தலைமையகத்திற்கு வந்து முறைப்பாடு செய்தார் அப் பெண்மணி (46)

## கையெழுத்தின்றி கடிதம்

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய புங்குடுதீவு. நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க யாழ் தற்காலிக அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்று கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கையெழுத்தின்றி வந்துள்ளது.

படிவம் 28 தமக்கு அனுப்பப்படவேண்டும் என்று அறிவிக்கும் கடிதமே இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளது 46

## புத்தாண்டில் அபாயப்படி

புங்குடுதீவு நயினாதீவு, பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு 1990 ஆம் ஆண்டு ஆடி முதல் மார்கழி வரையான ஆறு மாத கால அபாயப்படி எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டில் வழங்கப்பட இருப்பதாக மேற்படி சங்கத் தலைவர் ம. கனகலிங்கம் தெரிவித்துள்ளார்'

### சனசமூக நிலையங்கள் ஏற்பாடு

யாழ் மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களும் அன்னை பூபதியின் 4 ஆம் ஆண்டு நினைவு நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்றும் இம்மாதம் 30 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 14

### உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரியின் உயர்தரமாணவர் ஒன்றியத்தின் ஒன்றுகூடல் வைபவமும் மதியபோசன விருந்துபசாரமும் நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா முதன்மை விருந்தினராகவும், பிரதிக்கல்விப் பணிப்பாளர் துரை தியாகராசா விசேட விருந்தினராகவும், மகாஜனக் கல்லூரி அதிபர் ம, விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளும் இவ் வைபவம் நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் 1989 ஆம் ஆண்டு பாடசாலையூடாகப் பல்கலைக்கழகம்சென்றமாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் 1990 ஆம் ஆண்டில் இருந்து 1994 ஆம் ஆண்டு வரையாகவுள்ள இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கற்கும் எமது சகல க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத்தின் தலைவரும், அதிபருமான க. இராசதுரை அழைத்துள்ளார். 20

## தென்னை, பனை மரங்களில் திருடர்களின் அட்டகாசம்

சண்டிலிப்பாய் பகுதியில் இரவு நேரத்தில் தென்னந் தோட்டத்தில் புகுந்த திருடர்கள் பெருமளவு தேங்காய்களைத் திருடி அயல் வளவில் கொண்டுபோய் உரித்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் அவ்வளவில் உள்ள பனைமரங்களில் கட்டப்பட்டிருந்த கள்ளு முட்டிகளையும் இறக்கி கள் அருந்தி விட்டு முட்டிகளையும் உடைத்துள்ளனர் இவ்வாறான சம்பவம் பற்றி காவல் துறையினருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. 37

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை கிளிநொச்சியில் ஏற்பாடு

அடுத்தமாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்துக்கு வந்துள்ளன.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளன தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் இவை அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மகா வித்தியாலயம், கனிஷ்டமகா வித்தியாலயம் ஆகியவற்றில் இப்பரீட்சை நடைபெறும் எனக் கல்விப் பணிப்பாளர் கி. கமலநாதன் முரசொலிக்குத் தெரிவித்தார் (17)

## உயர்தரப் பரீட்சை காகிதாதிகள் யாழ் எடுத்துவரப்பட்டன

திட்டமிட்டவாறு அடுத்த ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி க. பொ. த, உயர்தர பரீட்சைகள் நடைபெறும் என யாழ் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் கொழும்பு சென்றிருந்த கல்விப் பணிப்பாளரினால் இன்று விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே மேற்படி பரீட்சைக்குரிய காகிதாதிகள் மற்றும் ஆவணங்கள் எல்லாம் பருத்தித்துறையில் இருந்து யாழ் கல்வித் திணைக்களத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. 47

## மகப்பேற்று நிலையங்களுக்கு ஐம்பதாயிரம் ரூபா நிதியுதவி

யாழ் மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு மகப்பேற்று நிலையங்களுக்கும் இவ்வருடம் ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் இ' தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இப்பணம் மகப்பேற்று நிலையத்திருத்த தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. 28

## சமூக அபிவிருத்தி ஊழியர்கள் பற்றாக்குறை

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் இராமிய, சனசமூக அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டு உள்ளன என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 13 சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் தற்பொழுது 9 உத்தியோகத்தர்களே சேவையாற்றி வருகின்றனர்.

இவர்களில் நால்வர் பட்டதாரிப் பயிற்சியாளர்களாவர் இந் நால்வரும் வேறு பதவி நியமனங்கள் பெற்றுச் செல்லவுள்ளதால் ஐந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் மட்டுமே இயங்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. (14)

★ அதிகார பகிர்வு எல்லை

★ பகிரப்பட வேண்டிய அதிகாரங்கள்

★ சிறுபான்மையினரின் பாதுகாப்பு

# இணக்கம் காணப்பட வேண்டிய 3 முக்கிய விடயங்களை சபைத் தெரிவுக்குழு இனங்கண்டுள்ளதாக அறிவிப்பு

இனப்பிரச்சினை தீர்வுக்கு இணக்கம் காணப்பட வேண்டிய மூன்று முக்கிய விடயங்களை பாராளுமன்ற தெரிவுக்குழு இனங்கண்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

அதிகார பகிர்வு எல்லை, பகிரப்படவேண்டிய அதிகாரங்கள், வடக்குகிழக்குபகுதிகளிலுள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பு என்பனவே இனங்காணப்பட்டுள்ள மூன்று முக்கிய விடயங்களாகும்.

## யோசனைகள் ஏற்கப்படாது

இதேவேளை மூன்றாவது தரப்பினூடாக அனுப்பப்படும் எந்தவொரு யோசனையும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என பாராளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

## புலிகள் நேரடியாக எழுத வேண்டும்

இந்த அடிப்படையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் மூலமாக விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும், விடுதலைப் புலிகள் விரும்பினால் தமது யோசனைகளை தெரிவுக்குழுவுக்கு நேரடியாக எழுத வேண்டுமெனவும் பாராளுமன்ற தெரிவுக்குழு தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## அடுத்த அமர்வு ஏப்ரல் 21 இல்

இது இவ்வாறிருக்க இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு அதன் அடுத்த அமர்வை ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

## புலிகளின் அழைப்பு

தெரிவுக்குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து தமிழ்மக்களின் அபிலாசைகளை அறிந்து கொள்ள வேண்டுமென விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தேயிலை உற்பத்தி 3 மாதங்களில் 2 கோடி கிலோவினால் வீழ்ச்சி!

நாட்டில் நிலவும் கடும் வறட்சி காரணமாகத் தேயிலை உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் மலையகத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் 3 கோடி 76 இலட்சம் கிலோ தேயிலை மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் இத்தோட்டங்களில் 5 கோடி 88 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடும் வறட்சி காரணமாகத் தேயிலைச் செடிகள் பாதிக்கப்பட்டு வருகின்றமையே இந்த உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேயிலை உற்பத்தி இவ்வாறு வீழ்ச்சியடைந்து செல்லும் அதேவேளை உலகச் சந்தையில் தேயிலையின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளமை இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் பாதிப்படையச் செய்துள்ளது.

# வவுனியாவில் ஆட்பதிவுத்திணைக்கள நடமாடும் சேவைகள்

எதிர்வரும் மே மாதம் வவுனியாவில் ஜனாதிபதி நடமாடும் சேவை இடம் பெறுவதற்கு முன்னோடியாக அம்மாவட்டத்தில் ஐந்து நடமாடும் சேவைகளை வழங்க ஆட்பதிவுத்திணைக்களம் நடவடிக்கையெடுத்துள்ளது.

இத்தொடரில் முதலாவது, இரண்டாவது நடமாடும் சேவைகள் எதிர்வரும் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறும்.

# க. பொ. த. (சா.த) முடிவுகள் சில தினங்களில் வெளியாகும்

கடந்த டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட க. பொ த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியாகவுள்ளன.

முதலாம் தவணை விடுமுறைக்கு முன்னர் இந்தப் பெறுபேறுகள் வெளியிடப்படுமெனப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆதர் வெதமுனி தெரிவித்தார்.

## பெறுபேறுகள்

சைவபரிபாலன சபையால் 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடாத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சைப் பெறுபேறுகள் யாவும் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் 20 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சபையின் பரீட்சை செயலாளர் அறிவித்துள்ளார். (22)

# கொழும்பு விவேகானந்தா தேசியபாடசாலையாகத்தரமுயரும்

கொழும்பு விவேகானந்தா மகா வித்தியாலயம் விரைவில் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்படவுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் நேற்று முன்தினம் அக்கல்லூரியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், ஆறுமுக நாவலர் ஆகியோரின் சிலைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

# தீவுப்பகுதிகளுக்கென காவலூரில பொலிஸ் நிலையம்

ஊர்காவற்றுறையில் புதிய பொலிஸ் நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இராணுவக் கட்டுப் பாட்டிலுள்ள தீவுப்பகுதிகளுக்கு இந்த பொலிஸ் நிலையம் சேவைபுரியுமெனவும், இதன் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் மோகனதாஸ நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையத்தில் சுமார் 100 பொலிஸார் பணிபுரிவதாகவும் மேலும் அறிவிக்கப்படுகின்றது

## பழைய மாணவர் சங்கம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் அதிபர் சி. டாலி தலைமையில் நடைபெறவுள்ளது. (37)

## தவக்கால நற்சிந்தனை



இரண்டு தீக்குச்சிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டால் தீ எழும். அத்தீயில் அவையிரண்டும் எரிந்து சாம்பலாவதே இயற்கையின் நியதி.

எங்கள் வாழ்வும் இவ்வாறானதே எங்கள்கருத்துகள் மட்டுமே சரியானவை என்ற மனநிலையுடன் பிறரின் கருத்துக்களை உதாசீனம் செய்கின்றோம், இதனால் மோதலும் - பிணவும் ஏற்படுகின்றது.

இப்பிளவு ஏதோ ஒருவகையில் எம்மையும் அழிக்கிறது எம் அழிவைத் தவிர்க்க வேண்டுமானால் மற்றவரின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும், நியாயத்திற்கு விட்டுக் கொடுக்க வேண்டும். இதனால் புரிந்துணர்வு வலுப்படுகிறது.

'தன்னை போல் தன் அயலானையும் நேசிப்பவன்' மட்டுமே அழிவுகளைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்ட முடியும்.

தவக்காலத்தில் இந்தச் சிந்தனையைக் கருத்திலெடுப்போம்.

★ அருட்சகோதரி ஹேமன் யோசப் (தி. கு. க.)

# கனேடிய பிரஜைகள்போல் நடித்து தமிழர்களை ஏமாற்றும் கும்பல்

கனேடிய பிரஜைகள் எனத் தம்மை அறிமுகப்படுத்தி பிரயாண முகவர்களாக நடித்துத் தமிழ் இளைஞர்கள் யுவதிகளிடமிருந்து லட்சக்கணக்கில் பணத்தைப் பெற்று ஏமாற்றிப் பிழைக்கும் யாழ் தமிழர்களின் தொகை தற்போது கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கனடாவில் தொழில் இழப்புக் காரணமாகக் கொழும்பு வந்து பயணிகளை அழைத்துச்சென்று பிழைக்கும் சிலர் ஒரு புறமிருக்கப் போலி தஸ்தாவேஜுகளுடன் பயணிகளை ஏமாற்றிப் பிழைப்போரே அதிகம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளிலுள்ள ஹோட்டல்களில் நிலைகொண்டுள்ள இவர்கள் ஹிப்பிகள் போலத் தலை வளர்த்து நாகரிக உடைகளுடன் தங்கச் சங்கிலிகள், மோதிரங்களும் அணிந்து பயணிகளைக் கவரும் வகையில் கவர்ச்சியாக நடந்துகொள்கிறார்களாம்

இவ்வாறான முகவர்களிடம் பணத்தைப் பறிகொடுத்த சில பயணிகள் சிங்கப்பூர், மலேசியா, பாங்கொக், மொஸ்கோ ஆகிய இடங்களில் அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 15

# பேராயர் ஞானப்பிரகாசம் ஓய்வுபெறுகிறார்

கொழும்பு பேராயர் மகா அருள் ஞானப்பிரகாசம் பதவியிலிருந்து இளைப்பாறவுள்ளார்,

எதிர்வரும் ஜூலை முதல் இவர் ஓய்வு பெறுவார் என அறிவிக்கப்படுகின்றது.

மகா அருள் ஞானப்பிரகாசம் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு பேராயராக நியமிக்கப்பட்டிருந்தார்.

# மயிலணியில் நால்வருக்கு...

மயிலணியில் இரண்டு சிறுவர்கள் உட்பட நான்கு பேர் நேற்று முன்தினம் விசர்நாய்க்கடிக்கு உள்ளானார்கள்

இப்பகுதிகளில் விசர்நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும், நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து இன்னமும் போடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (47)

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் "லீக்" முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் இறீன் பீல்ட் விளையாட்டுக் கழக 'பி' அணியை சென்றோக விளையாட்டுக்கழக அணி 2:0 கோல்களால் தோற்கடித்தது.

'ஏ' பிரிவுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை இறீன் பீல்ட் விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு அணி 1: 0 கோல் கணக்கில் வென்றது. (16)

# பிரான்சில் சைவசித்தாந்தம் பயின்றவர் பாண்டிச்சேரி பேராயராக நியமனம்

பாண்டிச்சேரி — கடலூர் மறைமாவட்டத்தின் பேராயராக பேரருட்திரு மைக்கல் அகஸ்தீன் பரிசுத்த பாப்பரசரினால் நியமிக்கப்பட்டுள்ளார்

இந்த மறைமாவட்டத்தின் 13-வது பேராயர் இவராவர் தென்னாற்காடு மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட பேராயர் மைக்கல் அகஸ்தீன் பிரான்சில் சைவ சித்தாந்தத்தில் டாக்டர் பட்டம் பெற்றவரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# லலித்தின் மெய்க்காப்பாளர் பொலிஸாரினால் கைது!

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் தனிப்பட்ட மெய்ப் பாதுகாவலர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட சுழல் துப்பாக்கியை அனுமதிபெறாது வேறு இருவருக்குக் கொடுத்ததாக இவர் மீது பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

# விபுலானந்தர் நூற்றாண்டு விழா

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நேற்று மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் விபுலானந்தர் கலை அரங்கில் ஆரம்பமாகின.

நாளை வரை இந்த விழா அங்கு இடம்பெறும்,

ஆசிரியக் கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தினர் இவ் விழாவை ஏற்பாடு செய்துள்ளனர்.

# 9200 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிகிடைக்கும்

1091-92 ஆம் கல்வியாண்டுக்கு 9200 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

கடந்தவருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தலான புள்ளிகளைப் பெற்றவர்களே இவர்களாவர்.

இந்தப் பரீட்சைக்கு ஒரு லட்சத்து 59 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர். இவர்களில் 47, 250 பேர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தனர்.

## கைதடி விநாயகர் வில்லி லில்லியில் வருகிறார்

கைதடி விநாயகர் லக்ஷ்மி அம்பாள், நவக்கிரக நாயகர்கள் சகிதம் 'லில்லி லில்லி' கப்பலில் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துறை துறைமுகத்தை வந்தடைவார்.

கைதடி தெருப்பிள்ளையார் ஆலயத்திற்காக கொழும்பில் வார்க்கப்பட்ட இவ் விக்கிரகங்களைக் குணைக் கப்பலில் எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டதனையடுத்து 'லில்லிலில்லி' கப்பலில் இவை ஏற்றப்பட்டுள்ளதாக எமது கொழும்பு நிருபர் தெரிவிக்கிறார். இந்த ஆலயத்திற்கான கட்டிட நிர்மாண வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருவதும் தெரிந்ததே.

கைதடி விநாயகர் ஆலய அறங்காவலர் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு தேவராஜ் ஊடாக கட்டுப்படைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான அனுமதியைப்பெற்றுள்ளார் (45)

## செயற்கைக் கோள்களை ஏவும் ராக்கெட்டை இந்தியா தயாரிக்கும்

செயற்கைக் கோள்களை விண்ணில் பறக்க விடுவதற்கான ராக்கெட் ஒன்றினை இந்திய விண்வெளித்துறை திட்டமிட்டுள்ளது.

தற்போது இந்திய செயற்கைக் கோள்கள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்தே பறக்க விடப்படுகின்றன.

இந்த ராக்கெட்டைத் தயாரிப்பதற்கு 800 கோடி ரூபா செலவாகும். 1995 முதல் இது செயற்படும்

## கிறிஸ்தவ பாட கருத்தரங்கு

யாழ் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உ. த) பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களின் நலன் கருதி கிறிஸ்தவ பாடக் கருத்தரங்கொன்றை எதிர் வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணி முதல் மாலை 4,30 மணிவரை பேராலயத்தில் நடத்தவுள்ளனர்.

இதனை யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைப் பிரதம விரிவுரையாளர் அருட்திரு சந்திரகாந்தன் அடிகளார் நடத்துவார்.

இதேபோன்ற கருத்தரங்கொன்றில் கடந்த வருடம் 300 க்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டுபயன் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## முதல் 3 இடங்களும் கொழும்பு மாணவர்களுக்கே!

கடந்தவருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் அகில இலங்கை ரீதியில் ஆகக் கூடுதலான புள்ளிகளை கொழும்பு றோயல் கல்லூரி மாணவர் பெற்றுள்ளார்.

இந்த வரிசையில் இரண்டாம், மூன்றாம் இடங்கள் முறையே ஆனந்தாக்கல்லூரி, றோயல் கல்லூரி மாணவர்களுக்கே கிடைத்துள்ளது.

முதலாம் இடத்தைப்பெற்ற மாணவன் 365 புள்ளிகளையும், இரண்டாமிடத்தைப் பெற்ற மாணவன் 360 புள்ளிகளையும், மூன்றாமிடத்தைப் பெற்ற மாணவன் 357 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

இந்த மூவரும் கணிதத்துறை மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வறட்சி நிவாரணம்

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து ஆராயப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

## தமிழக மீனவர்களைக் காக்க தொலைத் தொடர்பு நிலையங்கள்

கடலில் காணாமற்போகும் தமிழக மீனவர்களை மீட்கவென தொலைத்தொடர்பு நிலையங்களை தமிழக அரசு அமைக்கவுள்ளது.

இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய கரையோரப் பிரதேசங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த தொலைத்தொடர்பு நிலையங்கள் சக்தி வாய்ந்த வயர்லஸ் கருவிகளைக்கொண்டதாக செயற்படும்.

## 700ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ளோருக்கே முத்திரை

புதிய ஏழாவது தொடர் வறுமை நிவாரண உணவுமுத்திரை சகல மாவட்டச் செயலகங்களுக்கும் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டு விடுமென நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய வறுமை நிவாரண உணவு முத்திரைகள் 700 ரூபாவுக்குக் குறைந்த மாத வருமானம் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

## வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு 78 புதிய பிராந்திய அதிபர்கள் நியமனமாவர்

பிராந்திய அலுவலகங்களை ஏற்படுத்தும் அரசின் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென 230 புதிய பிராந்திய அரச அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இது தவிர வடக்கு கிழக்கும் பகுதிகளுக்கென மேலதிகமாக 78 புதிய பிராந்திய அரச அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் சுமார் 300 பிராந்திய அரச அதிபர் அலுவலகங்கள் நாடு முழுவதும் செயற்படவுள்ளன.

மாவட்ட அரச அதிபர்களின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் இப்புதிய திட்டம் பரீட்சார்த்த முறையில் தெற்கில் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லையெனவும் இதனாலேயே புதிய நியமனங்களை வழங்கி இத்திட்டத்தை மீண்டும் மாற்றமைப்புடன் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அயோத்தியை மத்திய அரசு பொறுப்பேற்குமென எச்சரிக்கை

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் உத்தரப் பிரதேச அரசு தேவையற்ற விதத்தில் கட்டிடங்கள் எழுப்புவது தடைசெய்யப்பட வேண்டும் என இந்திய உள்துறையமைச்சர் எஸ், பி, சவான் உத்தரபிரதேச அரசிற்கு எச்சரித்துள்ளார்.

இராஜ்யசபாவில் உரையாற்றிய சவான், அயோத்தியைப் பாதுகாக்க உத்தரப்பிரதேசம் தவறினால் அப்பகுதியை மத்திய அரசு தன் பொறுப்பில் எடுக்கத் தயங்காது என்றார்

அயோத்தி பாபர் மசூதி பகுதியில் உத்தரப்பிரதேச பாரதிய ஜனதா அரசு இராமர் கோயிலைக்கட்ட தீவிர முயற்சி எடுத்து வருவது தெரிந்ததே.

## தனது இருபிள்ளைகளை கொலை செய்த கோப்பாய் பெண் கனடாவில் கைது!

கனடாவில் வதியும் இலங்கைத் தமிழ்ப் பெண்மணி யொருவர் அங்கு தனது இரு ஆண் பிள்ளைகளையும் கழுத்தை நெரித்துக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கனடாவில், ரொறன்ரோ நகரில் கென்னடி வீதியில் உள்ள இல்லத்திலேயே இந்தக் கொலைச்சம்பவம் நடந்துள்ளதாக கனேடியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கனடாவில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த தமிழ்ப் பெண்மணி கோப்பாய் பகுதியைச்சேர்ந்தவரென மேலும் தெரிவிக்கப்படுகின்றது

## 'அடக்குமுறைச் சட்டமே ஜெயலலிதாவின் அறிவிப்பு'

"தமிழகத்தில் போராட்டங்கள் நடத்தும்போது சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டால் அதற்கு அக்கட்சித் தலைவர்களே பொறுப்பு என்ற சட்டம் கொண்டுவரவுள்ளதாக ஜெயலலிதா அறிவித்துள்ளது சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது"

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவுச் செயலர் ஆர், நல்லகண்ணு தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சுதந்திரப் போராட்டத்தை நசுக்க அவர்களால் போடப்பட்ட அடக்குமுறைச் சட்டம் போன்றது இது உள்ளது என அவர் கண்டித்துள்ளார்.

## இன்று ஆரம்பம்

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி வகுப்புக்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (44)

## மணிப்பூரில் நிலநடுக்கம்

இந்தியாவின் மணிப்பூரில் நேற்றுக் காலை நான்கு மணிக்கு நிலநடுக்கமொன்று அவதானிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. உயிர்ச்சேதங்கள் எதுவுமில்லை.

## இன்றும், நாளையும் யாழ்நகரில் முத்தமிழ்விழா!

கோண்டாவில் கலைக் கோட்டம் முத்தமிழ்விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு யாழ் செல்லோன்னை அக்கடமியில் ஆரம்பமாகும்.

தனிநாயக அடிகள் அரங்கில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் நல்லை ஆதீன குருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவர்.

தேசியக் கொடியைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் ஏற்றி வைப்பார்.

மாலை பண்டிதமணி கணபதிப்பிள்ளை அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலை பண்பாட்டுக் கழகத் தலைவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கலந்து கொள்வார். நிதி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சேரலாதன் மங்கலவிளக்கேற்றி வைப்பார்.

நாளை சனிக்கிழமைகாலை நிகழ்ச்சிகள் நாவலர் அரங்கில் நடைபெறும் தேசியக்கொடியைத் திலக விசேட இராணுவத் தளபதி வெற்றியண்ணா ஏற்றிவைப்பார். யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி மங்கல விளக்கேற்றுவார்,

விபுலானந்தர் அரங்கில் நடைபெறும் மாலை நிகழ்ச்சிகளில் யாழ். மாவட்ட உதவி அரசியல் பொறுப்பாளர் தமிழ் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி வைப்பார்,

## இடம்பெயர்ந்த மாணவர்களின் மொத்தப் புள்ளிகள் வந்தன

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற விசேட க. பொ. த உயர்தர பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் தோற்றிய மாணவர்களின் மொத்தப் புள்ளிகள் நேற்றுக் கொழும்பிலிருந்து யாழ் கல்வித்திணைக்களத்துக்கு எடுத்துவரப்பட்டன.

யாழ் மாவட்ட 18 உயர்தர பாடசாலை மாணவர்களுடைய மொத்தப் புள்ளிகள் இவ்வாறு இங்கு வந்து சேர்ந்திருப்பதால் இப்பாடசாலை அதிபர்கள் இவ் விவரப்பட்டியலை வந்து பெற்றுச் செல்லுமாறு யாழ் கல்வி திணைக்களம் கேட்டுள்ளது. 47

## தனியார் வர்த்தகர்கள்மூலம் நியாயவிலையில்உணவுப்பொருள்கள்

கப்பல் மூலம் தருவிக்கப்படும் அரிசி. மா. சீனி போன்ற உணவுப் பொருள்களை தனியார் வர்த்தக நிலையங்களின் மூலமும் நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். அரசாங்கச் செயலகம் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக செய்தியொன்று தெரிவிக்கிறது.

# டில்லி உலகப் புத்தகக் கண்காட்சியில் இலங்கை காட்சியறையில் தமிழ் நூல்களுக்கு இடமில்லை

அண்மையில் புதுடில்லியில் உலகப் புத்தகக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. இக்கண்காட்சி வருடா வருடம் நடைபெற்று வருகிறது. இதில் உலகின் பல நாடுகளும் பங்குபற்றுகின்றன. ஒவ்வொரு நாடுகளுக்கும் தனித்தனிப் பாகம் காட்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்திய புத்தக விற்பனை நிலையத்தில் தமிழுக்கென 6 காட்சி நிலையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சிங்கப்பூர் காட்சி நிலையத்திலும் தமிழ் நூல்கள் பெருமளவு காணப்பட்டன. ஆனால் ஸ்ரீலங்கா காட்சிநிலையத்திலோ மருந்துக்குக்கூட ஒரு தமிழ் நூலும் காணப்படவில்லை. அந்த முழு இடத்தையும் சிங்களப் புத்தகங்களே ஆக்கிரமித்திருந்தன. (22)

★ சந்தேக நபர்களை ஒப்படைக்க கேணல் கடாபி மறுத்துவிட்டதால்

# லிபியாவுக்கு எதிராக தடைகளை அமுலாக்குவது குறித்து ஐ. நா. சபை திங்கள் கூடி இறுதி முடிவெடுக்கும்!

விமானத்தகர்ப்புக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு லிபியர்களையும் விசாரணைக்காக ஒப்படைப்பதென்ற தனது முன்னைய அறிவிப்பிலிருந்து லிபியா பின்வாங்கி விட்டது.

இந்தப் பிரச்சினையில் எந்த நாட்டிற்கு விசாரணை அதிகாரமிருக்கிறது என்பதனை சர்வதேச நீதிமன்றம் தீர்மானித்தாலன்றி குற்றம்சாட்டப்பட்டவர்களை ஒப்படைக்க முடியாது என லிபிய அதிபர் கேணல் கடாபி தெரிவித்துவிட்டார்.

இந்த இருவரும் நிபந்தனையின்றி அரபு லீக்கிடம் ஒப்படைக்கப்படுவார்களென முன்னர் வந்த தகவல்கள் தவறானவை எனவும் கேணல் கடாபி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப்பிரச்சினை பற்றி விவாதிக்க சர்வதேச நீதி மன்றம் நேற்றுக் கூடியது.

தனது அறிவிப்பிலிருந்து லிபியா பின்வாங்கி விட்டதையடுத்து, லிபியாவுக்கெதிரான விமான, ஆயுதத் தடைகளை அமுலாக்குமாறு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன ஐ நாவை வற்புறுத்தியுள்ளன.

இது தொடர்பாக நேற்று ஐ நாவில் விவாதிக்கப்பட்டதெனவும், லிபியா மீது தடையை அமுல் செய்வதற்கு அதிகாரத்தைப் பெறுவதற்கான வாக்களிப்பு எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறுமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தொழிலைக் கைவிட்டு மீனவர் கரை திரும்பினர்!

நேற்று முன்தினம் மாலை யாழ் [illegible] உள்ள கல்முனைக்கப்பால் மீன்பிடிக்கச் சென்ற குருநகர் மீனவர்கள் இப்பகுதியில் காணப்பட்ட கடற்படை நடமாட்டம் காரணமாக மீன்பிடிக்காமலேயே கரைக்குத் திரும்பி வந்தனர்.

அச்சமயம் கடலில் ரோந்து புரியும் கடற்படையினருடன் இராணுவத்தினரும் சேர்ந்து காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவித்தனர். அண்மைக்காலங்களில் இப் பகுதியில் கடற்படைப் படகுகள் அடிக்கடி ரோந்து புரிவதும் மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களது மீன்பிடி உபகரணங்களும் பிடிக்கப்படும் மீன், இறால் என்பன பறித்தெடுக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (15)

## வளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நிரந்தரப் படை!

வளைகுடாப் பிராந்தியம் வரும் நூற்றாண்டில் அமெரிக்காவுக்கு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் அங்கு நிரந்தரமான இராணுவப் படையொன்றை வைத்துப் பராமரிக்க வாஷிங்டன் எண்ணியுள்ளதென்றும் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இந்திய சமச்சீர் நிலையொன்றை பராமரிப்பதற்காக வளைகுடா நாடுகளும் கூட அமெரிக்காவை எதிர்பார்த்திருப்பதாய் அவர் கூறினார்.

ஈராக்கின் இராணுவ ஆற்றலை கட்டுப்படுத்தி வைக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவுக்கு இருப்பதாகவும் அவர் கூறினார்.

## விண்வெளிக்கலங்களை ரஷ்யர்கள் விற்பார்கள்!

ரஷ்ய விண்வெளி பொறியியல் துறைத் தலைவர்கள் அமெரிக்காவுக்கே விண்வெளிக் கலங்களையும், ரொக்கெட்டுக்களையும் தயாரித்து விற்பனை செய்வதற்கு முன்வந்துள்ளார்கள்.

இதன் மூலம் பெறப்படும் பணத்தை தமது இராணுவத்துக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும், இராணுவத்தை விருத்தி செய்யவும் ரஷ்யர்கள் பயன்படுத்துவார்களென அமெரிக்கர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

## 70 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியர் விவரம் சேகரிப்பு

ஓய்வூதியப் பணிப்பாளர் ஆர். டபிள்யூ பியசேனா அரச ஓய்வூதியர்களுக்கு, குறிப்பாக 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெண்கள், ஓய்வூதியர்கள் தத்தமது தற்போதைய சேவை விவரங்களை உடனடியாக தெரிவிக்குமாறு வேண்டியுள்ளார்.

இத்தகவல்கள் சேகரிப்பு வேலைகள் பிற மாவட்டங்களில் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் வெகு விரைவில் வடகிழக்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கவுள்ளதாகவும் அண்மையில் பொது நிர்வாக பிரதேச சபைகள் உள்ளூராட்சி அமைச்சரவையில் பேட்டி கண்ட வட மாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளன தூதுக்கோஷ்டியிடம் தெரிவிக்கப்பட்டதாக சம்மேளனத்தின் செயலாளர் பி. எஸ். திருச்செல்வம் தெரிவித்தார்.

மேற்படி விவரங்கள் ஓய்வூதியப் பணிப்பாளர் பணியகத்தில் பெறப்படும் படிவத்தில் நிரப்பி அனுப்பப்படல் வேண்டும் என்றும் தக்க காரணமில்லாமல் தாமதமாக்கும் ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் அவர்களின் நலன் புரிசேவைகள் நாடுபூராகவும் விஸ்தரிக்கப்பட வேண்டியதாலும் மேற்படி தகவல்கள் சேகரிக்கப்படுவதாக மேலும் பணிப்பாளர் தெரிவித்தார்.

வடபகுதி ஓய்வூதியர்களின் நன்மை கருதிக் குறிப்பிட்ட விண்ணப்பப் படிவங்கள் சம்மேளன செயலாளர் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

## டொனால்ட் கிண்ண போட்டிகள்

யாழ். சென்ற[illegible] விளையாட்டுக் கழகத்தினால் யாழ்ப்பாணத்திலுள்ள கிரிக்கெட் கழகங்களுக்கிடையில் வருடாவருடம் நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட விலக்கல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## லெபனானில் தேர்தல்

லெபனானில் கோடைகால ஆரம்பத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

1971க்குப் பின்னர் அங்கு முதற்தடவையாகத் தேர்தல் நடைபெறவுள்ளது.

## அபாயப்படி இல்லை

யாழ் ஆட்பதிவுத்திணைக்கள ஊழியர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட கஷ்ட நிவாரணப்படி வழங்கப்படாதுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. 14

## அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிட நடவடிக்கை

யாழ் மாவட்ட அளவைகள் நிறுவைகள் திணைக்களம் வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசச் செயலகப் பிரிவிலுள்ள வர்த்தகர்களின் அளவைகள் நிறுவைகள் கருவிகளுக்கு 26 ஆம் திகதி முத்திரையிடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், அடுத்த மாதம் 2, 3 ஆம் திகதிகளும் அப்பகுதி வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகளின் அளவைக் கருவிகள், தராசுகளுக்கு முத்திரையிடப்படுமென்று நிறுவைகள் அளவைகள் பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் அறிவித்துள்ளார்.

கட்டைவேலி - நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பழைய அலுவலகக் கட்டிடத்தில் இம் முத்திரையிடும் வேலைகள் நடைபெறும். 14

## ஈராக்கின் பகுதிகள் மீது துருக்கி விமானங்கள் தாக்குதல்

ஈராக்கின் சில பகுதிகளை நேற்றுத் துருக்கி விமானப் படை தாக்கியதாகத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

இந்தப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான தளங்கள் இருந்ததாகத் துருக்கி கூறியுள்ளது.

ஈராக்குடனான தனது எல்லைகளை மூடப் போவதாகவும் துருக்கி அறிவித்துள்ளது.

# செய்தி உலகம்

## தமிழ்நாட்டின் 'பெருமை'

இந்தியாவிலேயே குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

விபச்சாரம், கள்ளச்சாராயம், கள்ளப் பாஸ்போர்ட் என்பனவற்றில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. கொலை, கொள்ளை என்பனவற்றில் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

## மொரார்ஜியின் பிறந்த நாள்

முன்னாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் இவ்வாண்டு குதூகலத்துடன் காணப்படுகிறார். காரணம் இவ்வாண்டுதான் அவரது பிறந்ததினம். மொரார்ஜி பிறந்தது லீப் வருடத்தில். இதனால் நான்கு வருடங்களுக்கொருமுறையே அவர் தனது பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறார்.

## பேயின் குழந்தை!

அண்மையில் ஆபிரிக்காவிலுள்ள பாயேன் என்னும் ஊரில் 3 தலைக் குழந்தை ஒன்று பிறந்தது. உடனே இது பேயின் குழந்தை என எல்லோரும் சேர்ந்து கொல்வதற்காக மருத்துவமனைக்கு ஓடிச் சென்றனர். குழந்தையின் தாயார் குழந்தையைக் கொல்ல வேண்டாமென வந்தவர்களிடம் மன்றாடினார். பின்னர் டாக்டர்கள் சேர்ந்து அறுவைச் சிகிச்சைமூலம் குழந்தையின் ஒரு தலையை அப்புறப்படுத்தினர். வந்தவர்களும் திரும்பிச் சென்றனர். (22

## அருகிவரும் குரங்கினம்

வாலில்லாக் குரங்கு இனம் மலேசியாக் காடுகளில் மட்டுமே உள்ளது. இந்த இனம் தற்போது அருகி வருகிறது.

இதனைச் சிலர் மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்குக் கடத்தி அங்கிருந்து வெளிநாடுகளுக்குக் கடத்தி வந்தனர். இக் கடத்தல் தற்போது பிடிபட்டுவிட்டது. மலேசிய அரசு சிங்கப்பூரிலிருந்து குரங்குகளைப் பறிமுதல் செய்து காட்டில் விட்டுவிட்டது.

### அரசமைப்பதில் சிக்கல்

## தாய்லாந்து புதிய பிரதமர் போதைப்பொருள்சம்பந்தப்பட்டவர்

தாய்லாந்தின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்ட பிரபல தொழிலதிபரான நரோன் வங்வான்(66) அரசமைப்பதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இவர் தாய்லாந்தின் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதை அமெரிக்காவும் ஊர்ஜிதம் செய்துள்ளது. இவர் போதைப்பொருள் கடத்தல்காரருடன் தொடர்புடையவர் என்பதால் கடந்த வருடத்தில் இவர் அமெரிக்கா வர அனுமதி மறுக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இக்குற்றச்சாட்டை நரோன் மறுத்துள்ளார்.

## மண்டைதீவில் இதுவரை 6 வயோதிபர்கள் மரணம்

மண்டைதீவில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ள வயோதிபர்களில் 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி எஸ் சண்முகநாதன்(72) இறந்துவிட்டதாக உறவினர்களுக்கு அங்கிருந்து வந்த செய்தி மூலம் அறியவந்துள்ளது

சுமார் 40 வயோதிபர்கள் மண்டைதீவில் தங்கியிருந்தனர். இவர்களில் ஆறு பேர் இதுவரை இறந்துவிட்டது குறிப்பிடத்தக்கது. 28

## ★ ஜெயலலிதா தாக்கப்பட்டது பதிவேட்டில் திருத்தம் தமிழக சபாநாயகர் தகவல்

1989 மார்ச் 25 இல் தமிழக சட்டப்பேரவையில் அன்றைய எதிர்க்கட்சித்தலைவி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பேரவை பதிவேட்டில் தவறான தகவல்கள் பதியப்பட்டுள்ளதாக தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று தெரிவித்தார்.

அன்றைய சம்பவம் பற்றி பதிவேட்டில் இருப்பவற்றையும் சபாநாயகரின் நேற்றைய விளக்கத்தையும் சேர்த்து புதிதாக பதிவேடு அச்சிடப்படும் எனவும் அவர் சொன்னார்.

## 85பிறப்புபதிவுப்புத்தகங்கள் செயலகத்துக்கு வந்தன

யாழ் செயலக மேலதிகப் பதிவாளர் பணிமனைக்கு பிறப்புக்களை பதிவு செய்வதற்கான 85 புத்தகங்கள் வந்து சேர்ந்துள்ளன.

இவை ஒழுங்காகக் கணக்கு எடுக்கப்படும் மிக விரைவில் குடா நாட்டின் எல்லாம் பிறப்பும் பதிவாளர்களுக்கும் யாழ் போதனா வைத்தியசாலைக்கும் அனுப்பி வைப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகச் செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இவையும் யாழ் மாவட்டத் தேவைகளுக்கு போதாதிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன (25)

## இந்திய பாராளுமன்றத்தில் பீ. ஜே. பி வெளிநடப்பு

இந்திய பாராளுமன்றத்தின் நேற்று இரு சபைகளிலுமிருந்து பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்,

விலைவாசி உயர்வு அரசின் பட்ஜட்டில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் என்பவற்றை எதிர்த்தே இவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு புதிய அம்புலன்ஸ் வருகிறது

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கென புதிய அம்புலன்ஸ் வாகனம் இந்த வாரத்தில் கொழும்பிலிருந்து வரவுள்ளது

இதனைக்கொண்டுவர ஊழியர்கள் கொழும்பு சென்றுள்ளனர்

கிளிநொச்சி சுகாதாரப் பணிப்பாளர் சுகாதார அமைச்சுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை யடுத்தே இந்த அம்புலன்ஸ் கிடைத்துள்ளது 17

## தினமும் பத்து லொறிகளில் வடக்கே மண்ணெண்ணெய்

கொலன்னாவ பெற்றோலியம் கூட்டுத்தாபன களஞ்சியத்திலிருந்து தினமும் பத்துக்கும் அதிகமான லொறிகளில் வடக்கே மண்ணெண்ணெய் கொண்டுவரப்படுவதாக கொழும்பு நிருபர் அறிவித்துள்ளார்

தனியார், கூட்டுறவு லொறிகள் இங்கு மண்ணெண்ணெயைப் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 45

## குத்துச்சண்டை வீரருக்கு ஆறு வருட சிறைத் தண்டனை

முன்னாள் அதிபாரக் குத்துச்சண்டை அமெரிக்க வீரர் மைக் டைசனுக்கு ஆறு வருட சிறைத் தண்டனை நேற்று விதிக்கப்பட்டது அத்துடன் 30ஆயிரம்டொலர் குற்றப் பணமாகவும் அறவிடப்பட்டது

அமெரிக்க கறுப்பின அழகி மீதான பலாத்காரம் தொடர்பாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தமை தெரிந்ததே,

# இராணுவ கெடுபிடி மத்தியிலும் அன்னைபூபதி நிகழ்ச்சிகள்

மட்டக்களப்பில் இராணுவ கெடுபிடியின் மத்தியிலும் அங்கு அன்னைபூபதி நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வீதிகளில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்படுகின்றன. அன்னைபூபதியின் உருவப்படங்கள் அலங்கரித்து வைக்கப்படுகின்றன.

எனினும் இராணுவம் வருவதையறிந்ததும் அப்பகுதி மக்கள் இவ்வலங்காரங்களை அவசர அவசரமாக நீக்கிய பின் அவற்றைப் படையினர் சென்றதும் அமைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிற்கு எதிரான தனது உண்ணாவிரதத்தை அன்னைபூபதி மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியிலே மேற்கொண்டமை தெரிந்ததே.

## உணவு முத்திரை வந்துள்ளன

1991ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கும் 1992 பெப்ரவரி மாதத்துக்குமுரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் யாழ் செயலகம் வந்து சேர்ந்துள்ளன

இவற்றை 30ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்செயலகசமூக சேவைப்பிரிவில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு குடா நாட்டின் எல்லாப்பிரதேச செயலர்களுக்கும் சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளரால் அவசரக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 25

## குடும்பப் பதிவு அட்டைகள்

குருநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் குடும்ப பதிவு அட்டைகள் தற்போது பதியப்பட்டு வருகின்றன

பதியாதவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கிராம சேவையாளர் மகேந்திரலிங்கம் அறிவித்துள்ளார். (47)

## அச்சுவேலியில் நாய்களுக்கு தடுப்பூசி

அச்சுவேலிப் பகுதியில் சுமார் 200க்கும் மேற்பட்ட நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டன

இதேநேரம் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களையும் அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

நோய்கள் பரவாது தடுக்க கிணறுகளுக்குள் 'குளோரின்' மருந்து போடப்படுகிறது (45)

## சுகாதார பயிற்சி வகுப்பு

அச்சுவேலிப்பகுதி சுகாதாரத் தொண்டர்களுக்கு மூன்று நாள் சுகாதாரப பயிற்சி வகுப்பு அச்சுவேலி வடக்கு றோ. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. (43)

## விசர்நாய்க்கடி பற்றி கலந்துரையாடல்

விசர்நாய்க்கடி அபாயம் அதிகரித்து வருவது பற்றி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உடன் நடவடிக்கை எடுக்கும் முகமாக 31ஆம் திகதி செவ்வாய் காலை 9 மணிக்கு ஒரு கலந்துரையாடலை யாழ் வை. எம் சி. ஏ மண்டபத்தில்நடாத்தவுள்ளது

இக்கலந்துரையாடலில் சுகாதாரப்பகுதி அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றின் விஷேட ஆணையாளர்கள், யாழ் மாநகர சபை ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். 47

## உதவி அரச அதிபர்கள் ஏப்ரல் முதல் இடமாற்றம்

கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் க. குணராசா அடுத்த மாதம் 1 ஆம் திகதி முதல் யாழ் உதவி அரச அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல யாழ் உதவி அரச அதிபராகப்பணிபுரியும் ஹெக்டர் யோசப் சண்டிலிப்பாய்க்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

ஹெக்டர் யோசப்பதில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராகவும் பணியாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 25,47

## இரண்டாம் குறுக்கு தெருவில் கழிவு நீர் தேக்கம்

இரண்டாம் குறுக்குவீதி முன்பாக உள்ள குடியேற்றத் திட்டத்தில் இருந்து வாய்க்கால் மூலம் வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்கள் கடலில் சென்று விழுவதற்கு வழி செய்யாத காரணத்தால் யாழ் ஆஸ்பத்திரி வீதி முன்பாக உள்ள வாய்க்காலில் தேங்கி நிற்கிறது.

இதனால் இவ்வீதி ஊடாக பிரயாணம் செய்வோரும் இக்குடியேற்றத்திட்டத்தில் வசிப்போரும் மிகவும் அசௌகரியத்தை அனுபவிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. 15

## ★ மதிய உணவுமுத்திரைக்கு பொருள்கள் பெறமுடியாது கிளிநொச்சி மாணவர்அவதி

கிளிநொச்சிப் பகுதி மாணவர்கள் தமது மதிய உணவு முத்திரைகளுக்குரிய பொருள்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சில கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பொருள்கள் முடிந்து விட்டதாகவும் சில சமயம் பொருள்கள் வரவில்லை என்றும், அடுத்த முறை தரப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

இதனால் உணவு முத்திரைகள் கைக்கு வந்தும் பொருள்களைப் பெறமுடியாத நிலையில் மாணவர்கள் அலைந்து திரிகின்றனர். (17)

## லிபியா தாக்கல் செய்த வழக்கு சர்வ. நீதிமன்றில் விசாரணை

லிபியாவிற்கு எதிராக அமெரிக்காவும் பிரிட்டனும் எடுக்கும் நடவடிக்கைகளை ஆட்சேபித்து சர்வதேச நீதிமன்றில் லிபியா தாக்கல் செய்த வழக்கு ஹேய்க்கில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

1988இல் அமெரிக்க விமானத்தை குண்டுவைத்து தகர்த்தமைக்கு லிபியா மீது அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவை கடும் நடவடிக்கைகள் எடுக்க தயாராகி வருவது தெரிந்ததே.

## கிளிநொச்சிக்கு ரயர் ரியூப் யாழ்ப்பாணத்திலிருந்து!

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி பகுதிக்கு வியாபாரிகளினால் ரயர், ரியூப் கொண்டு செல்லப்படுகின்றன

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமும் சங்கங்களுக்கென ஒருதொகை ரயர், ரியூப் கொண்டுவரப்பட்டதும், தரை மார்க்கமாகவும் வந்த பெருந்தொகை ரயர், ரியூப் தேங்கிக் கிடக்கின்றன இதன் விலை 165 ரூபா

இதனால் வியாபாரிகள் யாழ்ப்பாணம் வந்து ரயர், ரியூப் போன்றவற்றை கொள்வனவு செய்து கிளிநொச்சிக்கு கொண்டு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது. 47

## புலிகளை ஒப்படைப்பது குறித்து பிரான்ஸிடம் இந்தியா பேச்சு

ராஜீவ்காந்திகொலையுடன் சம்பந்தப்பட்ட புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களை இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து இந்தியா, பிரான்ஸின் உதவியை நாடியுள்ளதாம்.

பிரான்ஸில் உள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களையே ஒப்படைக்குமாறு இந்தியா கோரிக்கை விட்டுள்ளது.

வெளியுறவு இணையமைச்சர் எட்வேர்டோ பெலேரோ இந்தியா வந்துள்ள பிரெஞ்சு வெளியுறவு இணையமைச்சரிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளாராம்.

### 5 சதம் இலாபம் 1000 ரூபா அபராதம்

டின்பிறினில் ஐந்து சதம் கொள்ளை இலாபம் அடித்த ரக்வானப் பகுதி வர்த்தகர் ஒருவருக்கு இரத்தினபுரி நீதவான் 1000 ரூபா அபராதம் விதித்தார். (47)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 27-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது